[1981 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திலே பெரிய பாலங்களை—இது போன்று எடுத்துக் கொண்டால், நிதிநிலை சரிப்படாது. ஆனால், அந்தப் பாலத்தையும் கூட இன்று அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிற கொள்கையின் அடிப்படையில் தரை மட்டப் பாலமாகக் கட்டுவதைத் தவிர்த்து, உயர் மட்டப் பாலமாகக் கட்டுவதற்கு ஏற்கனவே, நெடுஞ்சாலைத்துறை அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் கூட அந்தத் தரை மட்டப் பாலம் கட்டுவதைத் தவிர்த்து, உயர் மட்டப் பாலமாக எவ்வளவு ரூபாய் செலவானாலும் அதைப் போக்குவரத்துக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய திட்டத்தின் அடிப்படையில் உடனடியாகக் பரிசீலிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது உயர் மட்ட பாலமாகக் கட்டப்படும் என்று சொன்னார்கள். அது எப்போது கட்டப்படும் என்று அறிய விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிலேகூட அங்கே கட்டக் கூடிய பாலம் உயர் மட்ட பாலமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர தரை மட்டப் பாலமாக இருக்கக் கூடாது என்று சொல்லியிருப்பதாக அறிகிறேன். மேலும் அந்தப் பாலம் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களையும் இணைக்கக் கூடிய ஒரே வழியாக இருப்பதால் இந்த நிதியாண்டிலே அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இதர மாவட்டங்களை இணைக்கின்ற பாலம் என்பதால்தான் இந்தக் கருத்தைச் சொன்னேன். ஏனென்றால் 20 ஆண்டுகளுக்குப் பின்னால் எவ்வளவு ஜனத் தொகை ஏற்படும், எவ்வளவு வசதி தேவைப்படும் என்பதை கணக்கில் கொண்டு தான் ஒரு பாலம் கட்டுவதாக இருந்தாலும் அல்லது வேறு திட்டம் போடுவதாக இருந்தாலும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஏற்கனவே அரசு குறிப்பு இருக்கிறது. அதனால் இந்த தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக கட்டினால் இன்னும் எவ்வளவு காலத்தில் முடிக்கப்படும் என்பதை பரிசீலிக்கிறோம்.

கிருஷ்ணகிரி—ஒசூர் நெடுஞ்சாலை.

*வினா எண் 641—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலிருந்து ஒசூருக்குப் போகும் நெடுஞ்சாலை பழுதுபட்டுள்ளதா?

(ஆ) பழுது பார்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1981 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : நெடுஞ்சாலை பழுதுபட்டிருக்க வில்லை. இருந்த போதிலும், தற்பொழுது உள்ள வாகனப்போக்கு வரத்திற்கு ஏற்றபடி மேம்படுத்தப்பட்டு வருகிறது.

பொட்டிப்புரம் பகுதியிலுள்ள கட்டபொம்மன் கண்மாயினைச் சீர்படுத்தும் திட்டம்.

*வினா எண் 642—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடி பொட்டிபுரம் பகுதியில் கட்டபொம்மன் கண்மாய் சீர்படுத்த நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அந்தப் பணி எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1979ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப் பெற்றுள்ளது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தக் கண்மாயை வெட்டுவதற்கு அங்குள்ள விவசாயிகளிடமிருந்து நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகவும் அதற்கு இன்னும் பணம் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்றும் புகார் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் உடனடியாக அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்புதான் இருக்கிறது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு இன்னும் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்கவில்லை என்ற குறிப்பு இல்லை. ஆனாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த கட்டபொம்மன் கண்மாய் அந்தக் காலத்தில் கட்டபொம்மன் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஒளிந்து இருந்த போது அவரும் இந்தக் கண்மாய் கட்ட உதவி செய்தார் என்பதால்தான் அந்தக் கண்மாய்க்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த கட்டபொம்மன் கண்மயை மீண்டும் தூர் எடுத்து, இன்னும் பல ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?